# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



27

O/C

மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்(பொறுப்பு), தருமபுரி
அவர்களின் நடவடிக்கைகள்.

முன்னிலை : திருமதி. ர.ராணி, பி.இ.,

ந.க.எண்.1209/2020தம 2 நாள். 30.09.2020.

பொருள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கட்டிடம் - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - தருமபுரி மாவட்டம் - நல்லம்பள்ளி வட்டம் / ஊராட்சி ஒன்றியம் - அதியமான்கோட்டை ஊராட்சி மற்றும் கிராமம் - ச.எண்.1044/1-ல் 2.33.00 ஹெக்டேர் பரப்பளவுள்ள மனையில் G+3 தளங்கள் கொண்ட Type-A-ல் 8 Block-ம் + Type B-ல் 3 Block ஆக 11 பிளாக்குகளில் மொத்தம் 608 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டிடங்கள் கட்ட தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படுகிறது - தொடர்பாக.

பார்வை

1. மனுதாரர் Executive Engineer, Tamil Nadu Slum Clearance Board, Salem Division அவர்களின் கடிதம் எண்.10/உ.நி.பொ(தி)/2020,நாள். 31.08.2020 (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.11.09.2020) மற்றும் 28.09.2020.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 7486/2009 பிஏ2/1, நாள் 16.04.2009.
3. அரசாணை(நிலை)எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள், 04.02.2019
4. அரசாணை(நிலை)எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள், 31.01.2020
5. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை.2 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 4367/2019/நஊ2, நாள் 31.10.2019.
6. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 4367/2019/பிஏ2 நாள் 6.11.2019
7. அரசாணை (நிலை) எண்.166, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள். 29.11.2018 ( Insisting TNRERA Registration)
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 8557/2019/GR. நாள்.08.05.2019.

-------------

<u>உத்தரவு</u>

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம் / ஊராட்சி ஒன்றியம், அதியமான்கோட்டை ஊராட்சி மற்றும் கிராமம, ச.எண1044/1-ல் 2.33.00 ஹெக்டேர் பரப்பளவுள்ள மனையில் G+3 தளங்கள் கொண்ட Type-A-ல் 8 Block-ம் + Type B-ல் 3 Block ஆக 11 பிளாக்குகளில் மொத்தம் 608 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரிய விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் யாவும் பார்வை 1-ல் கண்டுள்ள நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்களின் கடிதத்துடன் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது, பார்வை 5-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் அதிகாரபகிர்வின்படி உத்தேச பலகுடியிருப்பு தொகுப்பு கடடிடத்திற்கு விதிகள் நிறைவு செய்கிறது, உத்தேச மனையிடத்திற்கு <u>'AtoR'</u> என எல்லையிட்டு அம்மனை வரைபடத்திற்கு <u>ம.வ/மா.ந.ஊஅ(தமா)எண்.79/2020</u> என எண்ணிடப்பட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில்

EXECUTIVE ENGINEER
Tamil Nadu Slum Clearance Board,
Salem Division, Salem-7

<u>உத்தேச தொகுப்பு கட்டிடம்</u> (Type A,B)

Type A-ல் (பிளாக் எண். 1,2,3,4,5,6,7 மற்றும் 10 வரை – 8 பிளாக்குகள்)

| தளங்கள் | ஒரு பிளாக் பரப்பு | மொத்த பரப்பு ச.மீ. | மொத்த குடியிருப்புகள் |
|---|---|---|---|
| தரைதளம் | 589.91 x 8 | 4719.28 | 16x8= 128 |
| முதல் தளம் | 589.91 x 8 | 4719.28 | 16x8= 128 |
| இரண்டாம் தளம் | 589.91 x 8 | 4719.28 | 16x8= 128 |
| மூன்றாம் தளம் | 589.91 x 8 | 4719.28 | 16x8= 128 |
| மொத்தம் | | 18877.12 | 512 |

Type B-ல் (பிளாக் எண். 8, 9 மற்றும் 11 – 3 பிளாக்)

| தளங்கள் | ஒரு பிளாக் பரப்பு | மொத்த பரப்பு ச.மீ. | மொத்த குடியிருப்புகள் |
|---|---|---|---|
| தரைதளம் | 295.53 x 3 | 886.59 | 8x3= 24 |
| முதல் தளம் | 295.53 x 3 | 886.59 | 8x3= 24 |
| இரண்டாம் தளம் | 295.53 x 3 | 886.59 | 8x3= 24 |
| மூன்றாம் தளம் | 295.53 x 3 | 886.59 | 8x3= 24 |
| மொத்தம் | | 3546.36 | 96 |

Total Built up area (FSI area) = 18877.12+3546.36 =22423.48 Sq.m
(Type A +B)
Total No. of Units = (512 + 96) = 608
Park (OSR) area = 2332.18 Sq.m.

மேற்கண்ட பரப்பளவுடன் கூடிய உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டிடத்திற்கு கீழ்க்காணும் சிறப்பு நிபந்தனைகள், நிபந்தனைகளுடன் கட்டிட வரைபடத்திற்கு <u>த.வ/மா.ந.ஊ.அ(தமா)எண்.44.அ.ஆ.இ.ச/2020</u> என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1) இட அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள வரிசை எண். 1 முதல் 6 வரை உள்ள Park (OSR) ஒதுக்கீட்டிற்கான 2332.15 ச.மீ. இடத்தினை நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் அவர்கள் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய வேண்டும். தானபத்திர நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
2) உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டுமானத்திற்கு தொழில்நுட்ப அனுமதி மட்டுமே நகர் ஊரமைப்பு துறையால் வழங்கப்படுகிறது. கட்டிட உறுதித் தன்மைகுறித்து நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் கீழ் எவ்வித விதிகளோ நெறிமுறைகளோ வகுக்கப்படவில்லை, தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட உத்தேச கட்டுமானத்தின் உறுதித்தன்மைக்கு கட்டிட உரிமைதாரர்கள், சம்மந்தப்பட்ட பொறியாளர், கட்டிடகலை வல்லுநர் உரிமம் பெற்ற அளவையாளர் மற்றும் ஒப்பந்ததாரர்களே பொறுப்பு ஆவர்.
3) It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
4) 'நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை, தொழில்நுட்ப அனுமதி. கட்டிட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம் மற்றும் பட்டா, மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.' அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

V.P. [signature]

EXECUTIVE ENGINEER
Tamil Nadu Slum Clearance Board,
Salem Division, Salem-7

33



'சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

5) This Order is passed subject to the outcome of the writ petition WP(MD) No.8948 of 2019"
6) நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி,
"The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated. 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Act 2016, The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate regulatory Authority."

<u>நிபந்தனைகள்</u>:-

1) உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டுமானத்திற்கு Solar Water Heating system அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுள்ளதாகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறுஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8) உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டுமானத்திற்கு விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9) அரசாணை எண். 341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள். 03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10) சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின் படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS & Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12) உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25(Water Act)-ன்படி மேற்படி வாரிய இணக்கம் பெறப்பட வேண்டும்.

EXECUTIVE ENGINEER
Tamil Nadu Slum Clearance Board,
Salem Division, Salem-7

13) அரசாணை நிலை எண்.17, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 15.2.2016.ன்படி Solar Panel பொருத்துவது தொடர்பான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.
14) உத்தேச மனையிடத்தில் கட்டுமானம் நடைபெறும் சமயம் பொதுமக்களுக்கு இடையூறு ஏதும் ஏற்படாத வண்ணம் கட்டுமானம் பகுதியினை சுற்றி பாதுகாப்பு அரண் அமைத்து கண்காணிக்கப்பட வேண்டும்.
15) மேற்காண் உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டடத்திற்கு பார்வை 2ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி நன்னிலைவரியாக தொகை ரூ. 61,100/. (ரூபாய் அறுபத்தோராயிரத்து நூறு மட்டும்) அரசு கணக்கில் உரிய தலைப்பில் 28.09.2020 அன்று நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சேலம் அவர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை அனுப்பி வைக்கும்படி ஊராட்சி மன்றத் தலைவர், அதியமான்கோட்டை ஊராட்சி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்கள் கட்டிட அனுமதி பெற ஊராட்சி மன்றத் தலைவர், அதியமான்கோட்டை ஊராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

29/9/2020

உதவி இயக்குநர் (பொ),
அ/நி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
29/9 தருமபுரி மாவட்டம்.

இணைப்பு
முத்திரையிடப்பட்ட வரைபடம் - 2 தொகுப்பு.

பெறுநர்,
ஊராட்சி மன்றத் தலைவர்,
அதியமான்கோட்டை ஊராட்சி,
நல்லம்பள்ளி வட்டம்,
தருமபுரி மாவட்டம்.
-- உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் 2 தொகுப்பு.

நகல்
1. நிர்வாகபொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம்,
சேலம் கோட்டம், சேலம். -- உத்தரவு கடிதம் மட்டும்.

2. தொழில்நுட்ப வைப்பறை, -- உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம்.

Jr. [signature] B.E. [signature] AEE

EXECUTIVE ENGINEER
Tamil Nadu Slum Clearance Board.
Salem Division, Salem-7

## நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் அதியமான்கோட்டை ஊராட்சி
## கட்டிட உரிமை ஆணை

திருத்தப்பட்ட 1994 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவுகளின்கீழ் நிலங்களை ஒப்புதல் செய்தாலும் குடிசை அல்லாத கட்டிடம் கட்டுதலும் அல்லது புதுப்பித்துக் கட்டுதலும் போன்றவைகளுக்கு நகரமைப்பு திட்ட நிலப்பகுதிகள் கட்டுதல் கட்டிடங்களுக்கு பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட ஆணை.

இவ்வூராட்சியின் கடித எண் : 38/2020-2021/அ.ஊ; நாள் : 23.10.2020

தீர்மாண நாள் : 07/ 09.10.2020

பார்வை : நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சேலம் உபகோட்டம்

மனுதாரர் பெயர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் (பொறுப்பு) தருமபுரி அவர்களின் ந.க.எண்: 1209/2020 [illegible] நாள்: 30.9.2020

முகவரி நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் சேலம் கோட்டம் - 636007.

கட்டக்கோரும் கட்டிடத்தின் இருப்பிடம் அதியமான்கோட்டை ([illegible])

வார்டு எண் 3

சர்வே எண் 1044/1

### கட்டிடத்தின் விவரம்

*நிர்வாக அலுவலர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத்தின் தன்மை*

1) தரைப்பரப்பு
2) முதல் மாடி பரப்பு
3) இரண்டாவது மாடிப்பரப்பு
4) எல்லை-சுற்றுவரின் நீளம்
5) கிணறு
6) குளிக்கும் அறை
7) மல அறை
8) சாக்கடையின் நீளம்
9) மெத்தைப்படி

} அனைத்தும் வரைபடத்தில் உள்ளவாறு

உரிமை ஆணைக்குக் கட்டணம் ரூ.2843964/- ரசீது எண்: 682127 நாள்: 23.10.2020

கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் மேற்குறிப்பிட்ட நிலத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள அளவுகளின் கட்டிடம் கட்ட உரிமை ஆணை வழங்கப்படுகிறது. அப்படி அங்கிகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு முரணாக மாறுபடுகளுடன் கட்டிடம் கட்டினால் உரிமையாணை பெற்றவரின் மீது அல்லது சொந்தக்காரரின்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கபடும் என்பதையும் அறிவிக்கபடுகிறது.

உரிமையாணையின் காலவரை : 23.10.2020முதல் 22.10.2021 வரை.

V. [signature]

**EXECUTIVE ENGINEER**
Tamil Nadu Slum Clearance Board,
Salem Division, Salem-7

**கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு சொந்தக்காரர் (அ) உரிமை ஆணை பெற்றவர் பொறுப்பாளர்**

1)அ) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு முரணாக கட்டிடம் கட்டக்கூடாது. என எச்சரிக்கபடகிறது.

ஆ)அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு முரணாகவோ அல்லது மாறுபாடு அடையவோ கட்டிடத்தை மாற்றிக்கட்ட மனுதாரர் விரும்பினால் அல்லது விரிவாக்க அலுவலரின் போதிய காலம் முன்னதாக மனு தாக்கல் செய்து புதிய அனுமதி பெற்ற பின் பிற கட்டிடம் கட்டிக்கொள்ளலாமே ஒழிய மற்றபடி கட்டிடத்தினைமாற்ற கூடாது.

இ) மேற்குறிப்பிட்டபடி அங்கீரிக்கப்பட்ட வரைபடத்திற்கு முரணாக மாற்றியோ அல்லது வேறு எவ்விமாகவோ புதிய அனுமதிபெறாமல் கட்டத் துவங்கினால் மேற்படி செய்த தவறுக்காக மேற்படியாளர் மீது சட்டப்படி வழக்கு தொடருவதுடன் கட்டிடத்தை இடிக்கப்படும்.

2)அ)உரிமையாணையின் காலரையரை முடிந்துவிட்டால் மேற்கொண்டு எந்தவொரு கட்டிடமும் கட்டக்கூடாது. அப்படி கட்டிடம் முடிவு பெறாமல் இருந்தால் ஆணையாளருக்கு மேற்கொண்டு கால அவகாசமட்டும் கொடுக்கும்படி செய்து அனுமதி பெற்றபிறகே மேற்கொண்டு கட்டிட வேலையை துவக்க வேண்டும்.

ஆ) அவ்வாறு புதுப்பிக்க தேவைப்பட்டால் சொந்தக்காரர் அல்லது உரிமை ஆணை பெற்றவர் அனுமதிக்கப்பட்ட காலவரைக்கு குறைந்தபட்சம் இரு மாதத்திற்கு முன்னதாக ஆணையாளருக்கு மனுதாக்கல் செய்து புதிய உரிமை ஆணை பெற வேண்டும்.

இ) உரிமை ஆணையின் காலவரை முடிற்தபின் மேற்குறிப்பிட்ட நிபந்தணை எண் .2. ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி அனுமதி பெறாமல் எந்த நேரத்திலாவது சொந்தக்காரர் அல்லது உரிமை ஆணை பெற்றவர் கட்டிட வேலையை செய்தால் வழக்கு தொடர்வதோடு மட்டுமல்லாது கட்டிடத்தை இடிக்கப்படும்.

3)திருத்தப்பட்ட 1994 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் அடங்கியுள்ள எந்த பிரிவுக்கு முரணாகவும் மேற்குறிப்பிட்ட கட்டிடத்தின் அவ்வப்போதைய சட்ட நீதிகளுக்கும் முரணாக கட்டக்கூடாது.

தமிழ்நாடு நகரமைப்பு சட்டத்தின்கீழ் (இ) அவ்வப்போது ஏற்படுத்தப்படும் சட்டங்களை நகரமைப்பு திட்ட விதிகளுக்கு முரணாகவும் மேற்குறிப்பட்ட கட்டிடத்தின் அவ்வப்போது அறிவிக்கப்பட்ட சட்டங்களுக்கும் முரணாக கட்டக்கூடாது.

தமிழ்நாடு நகரமைப்பு சட்டத்தின்கீழும் (இ) அவ்வப்போது ஏற்படுத்தப்படும் சட்டங்களை துணை விதிகளுக்கு முரணாக எதாவது கட்டிடம் கட்டினால் உரிமை ஆணை ரத்து செய்யவும் நிறுத்தி வைக்கவும் தனஜஅலுவலருக்கு உரிமையுண்டு. நிர்வாக அதிகாரிக்கு அல்லது அவரது அதிகாரம் பெற்றவர் கட்கப்பட்டுவரும் கட்டுடத்தை பார்வையிட எந்த நேரத்திலாவது வந்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தையும். ஊரிமை ஆணையையும் அவர்களின் பார்வைக்கு கொடுக்க எந்த நேரத்திலும் கட்டிடம் கட்டும் இடத்தில் வைத்திருக்க வேண்டும்.

4)மதிப்பீட்டிற்கு மிகாமல் கட்டிடத்தினை கட்டிக்கொள்ள வேண்டும்.தவறும்பட்சத்தில் ஊராட்சி சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கபடும்.

5) கழிவுநீர் கால்வாய் அமைத்துதர முடியாது. அனுமதிக்கபடும் கட்டிடத்தின் கழிவுநீர்க்கு உறிஞ்சி தங்களே அமைத்துக்கொள்ளவேண்டும்.

[signature]

PRESIDENT
Adhiyamankottai Panchayat
Nallampalli Panchayat Union.

தலைவர்/நிர்வாக அதிகாரி
அதியமான்கோட்டை ஊராட்சி

*பெறுதல்*

நிர்வாகப் பொறியாளர்
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்
சேலம் கோட்டம்,
சேலம் - 7.

[signatures]

EXECUTIVE ENGINEER
Tamil Nadu Slum Clearance Board,
Salem Division, Salem-7

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate